

தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை செயல் திட்டத்தின் கீழ் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் அரசின் 5 ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. சிறப்புரையாற்றினார். அருகில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதி மோகன், மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன், ஒன்றிய செயலாளர் பையனூர் எம்.சேகர், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ் ஜி.டி.யுவராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# ‘நமஸ்தே’ திட்டத்தின் இலக்குகளைப் பூர்த்தி செய்வதில் தடுமாறும் ஒன்றிய அரசு!

## விளிம்புநிலை மக்களின் மீது அக்கறையுடன் செயல்பட வேண்டும் – மக்களவையில் கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!



புதுடெல்லி, பிப்.4-

நாடு முழுக்க தூய்மை பணியாளர்கள் மற்றும் குப்பை சேகரிப்பாளர்களின் நலனை மேம்படுத்துவதற்காக ஒன்றிய அரசு கொண்டுவந்த ‘நமஸ்தே (NAMASTE)’ திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு ஒன்றிய அரசின் தரப்பில், முழுமையற்ற புள்ளி விவர சேகரிப்பு கணக்குகளே பதிலாக கிடைத்துள்ளன. மிக அடிப்படையான புள்ளி விவரங்களுக்கே இந்த கதி என்ற நிலையில், திட்டத்தின் இலக்குகளை பூர்த்தி செய்வதில் ஒன்றிய அரசின் தடுமாற்றம் வெளிப்படையாக தெரியவந்துள்ளது.

குப்பை சேகரிப்பாளர்களை உள்ளடக்காத முழுமையற்ற புள்ளி விவரம்:

ஐநா மற்றும் பல்வேறு தொழிலாளர் அமைப்புகளின் தரவுகளின் படி, இந்தியாவில் சுமார் 40 லட்சம் குப்பை சேகரிப்பாளர்கள் உள்ளனர். ஆனால், ஒன்றிய அரசு அளித்துள்ள புள்ளிவிவரங்களின் பட்டியலில் அவர்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

இப்படி குப்பை சேகரிப்பாளர்களை தவிர்ப்பது தான் திட்டமெனில், எதற்காக அவர்களும் திட்டத்தில் உள்ளடக்கப்படுவார்கள் என்று திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும்? இது உண்மையிலேயே அவர்களின் மீது அக்கறையோடு சேர்க்கப்பட்ட திருத்தமா, அல்லது உலக அமைப்புகளின் முன்னால் கணக்குக் காட்ட சொல்லப்பட்ட பொய்யா என்ற கேள்வியை தவிர்க்க முடியவில்லை.

**நிதி குளறுபடியால் பாதிப்புக்குள்ளாகும் திட்டத்தின் இலக்குகள்:**

நமஸ்தே திட்டத்தின் அடிப்படை இலக்குகள், நாடு முழுக்க தூய்மை பணியை 100% இயந்திரமயமாக்குவது (100% Mechanization), பூஜ்ய உயிரிழப்பை கொண்டு வருவது (Zero Fatality) மற்றும் அதில் ஈடுபடும் மக்களின் நலனைப் பேண மருத்துவக் காப்பீடு, பாதுகாப்பு உபகரணங்கள், முதலீடுகள் ஆகியவற்றை அளித்து அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவது.

ஆனால், இந்த இலக்குகளை அடைய ஒன்றிய அரசு ஒதுக்கியிருப்பது இது வரை 350 கோடி என்ற சொற்ப நிதி மட்டுமே! இதை அனைத்துப் பயனாளர்களின் எண்ணிக்கைக்கும், ஒன்றிய அரசு அறிவித்த குப்பை சேகரிப்பாளர்கள் உட்பட, கணக்கிட்டால் ஒருவருக்கு தோராயமாக ரூ.850 மட்டுமே வருகிறது. இந்த குறைவான தொகையை வைத்து இலக்குகளை எட்டுவது எந்த காலத்திலும் சாத்தியமற்றது.

தூய்மை பணியாளர்கள் மற்றும் குப்பை சேகரிப்பாளர்கள் என்பவர்கள், சமுதாயத்தின் மிக விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கும் மக்கள். அவர்களுக்கான திட்டத்தில் மெத்தனத்திற்கும் குளறுபடிகளுக்கும் இடம் கொடுக்காமல், புள்ளிவிவரங்கள் முதற்கொண்டு அனைத்திலும் ஒன்றிய அரசு அக்கறையாக செயல்பட வேண்டும்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் வலியுறுத்தியுள்ளார்.

# எழும்பூர் தொகுதியில் - பேரறிஞர் அண்ணா 57-ஆவது நினைவு நாள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., அஞ்சலி!

சென்னை,பிப்.4-

எழும்பூர் சட்டமன்ற அலுவலகம் முன் நடந்த நிகழ்ச்சியில் கழகத் தோழர்களுடன் இணைந்து உறுதி மொழி ஏற்றார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 57-ஆவது நினைவு நாளை முன்னிட்டு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தின் முன் நடந்த அஞ்சலி நிகழ்ச்சியில், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, கழகத் தோழர்களுடன் இணைந்து கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களைக் கடைப்பிடிக்கும் உறுதி மொழியை ஏற்றார்.

இதில் வெ.மருதன், மா.காந்தி, கமலக்கண்ணன், கே.சீனிவாசன், இரா.வெற்றிவேல், வெங்கட், முனுசாமி, ஏ.யு.மணிவண்ணன், ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன், பு.சதிஷ்குமார், ஜெயலெட்சுமி, கி.புஷ்பராஜ், தேவநிதி, பிரம்ம தேவன், சரவணன், நாகராஜ், வே.பா.ரோஹித்குமார், ராஜ்குமார், நித்திஷ் கிரிதரன், சதிஷ், சூர்யா, மகேஷ்குமார், திவாகரன், குணா, கப்பில்குமார், சூர்யா, கார்த்திகேயன், கவிதா, விஷால், சிவக்குமார், ரோஷன், தனுஷ், சத்யகலா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.



கழகப் பொறியாளர் அணி சார்பில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனைப்படி அணியின் மாநில துணைச் செயலாளர் சி.பிரதீப் ஏற்பாட்டில் 1000ம் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்ற தமிழ்நாடு ஸ்டேட் லெவல் கராத்தே,சிலம்பம் 2026 போட்டிகள் தமிழ்நாடு பிசிகல் எஜுகேஷன் மற்றும் ஸ்போர்ட்ஸ் யுனிவர்சிட்டியில் பொறியாளர் அணியின் மாநில செயலாளர் எஸ்.கே.பி கருணா தலைமையில் மற்றும் திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர், ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர்.எல் இதயவர்மன் முன்னிலையில் நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சைக்கிள்கள் சான்றிதழ் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட அமைப்பாளர் எம்.ஆர்.எஸ் கதிரவன்,துணை அமைப்பாளர்கள் டி.செங்குட்டுவன், எஸ்.விக்னேஷ்,ஆர். அன்புஎழில், ஒருங்கிணைப்பாளர்கள் டி.ஜசன் ராஜா, எம்.திரவியம்,எம்.முருகன் ஆகியோர் பங்கேற்றனர்.

## கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மை அறியும்

# தொழில்நுட்பமுறைகள் தடைச் சட்டம் - மாநில மேற்பார்வைக் குழுவின் கூட்டம்!

## தலைமைச் செயலகத்தில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, பிப்.4-

கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மை அறியும் தொழில்நுட்பமுறைகள் (பாலினதேர்வை தடை செய்தல்) சட்டம் 1994 ன் பிரிவு 16(A)ன் படி அமைக்கப்பெற்ற மாநில மேற்பார்வை குழு (PCPNDTState Supervisory Board) கூட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (03.02.2026) தலைமைச் செயலகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூட்ட அரங்கில் நடைபெற்றது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் முன்னிலையில் இச்சட்ட செயல்பாடுகளின் ஆய்வு நடைபெற்றது.

இவ்வாய்வுக் கூட்டத்தில் இயக்குநர், தேசிய நல்வாழ்வு குழுமம், திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார திட்டம், ஆணையர் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை, அரசு கூடுதல் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, அரசு இணை செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம், இயக்குநர் மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், இயக்குநர் குடும்பநலம், இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை, இணை இயக்குநர் (சட்டம்), மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், மெட்ராஸ் சமூக சேவை பள்ளி உதவி பேராசிரியர், மகளிர் சட்ட குழுமம், சென்னை உயர்நீதி மன்றம், NGO உறுப்பினர்கள், இயக்குநர், மகப்பேறு மற்றும் மகளிர் நல அரசு மருத்துவமனை, RSRM மருத்துவமனை, இயக்குநர், குழந்தைகள் நல மருத்துவமனை, இயக்குநர், பௌர்னார்ட் கதிரியக்க மையம், மெட்ராஸ் மருத்துவ கல்லூரி, கதிரியக்க துறை இயக்குநர், கீழ்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, சார்பு செயலாளர், நியமன அலுவலர்கள், துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலில் 1994-ல் பெண் குழந்தைகள் கருக்கலைப்பை தடுக்கும் நோக்கில் இயற்றப்பட்ட இச்சட்டமானது 2003 ல் திருத்தம் செய்யப்பட்டு கருவுறுதலுக்கு முன் பாலினத் தேர்வை தடை செய்யும் முறைகளும் (Pre Conception) இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

தமிழ்நாட்டில் PCPNDT 1994 - சட்டத்தின் படி மொத்தம் 9070 பதிவுபெற்ற அரசு (1727) மற்றும் தனியார்(7343) ஸ்கேன் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

சட்டப்பேரவை அறிவிப்பு எண் 91ன் படி மண்டலவாரியாக தமிழ்நாடு முழுவதும் திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம்கள் நடத்தும் பொருட்டு முதற்கட்டமாக சென்னை மாவட்டத்தில் 31.05.2025 அன்று தொடங்கப்பட்டு தொடர்ச்சியாக கோவை , மதுரை , கன்னியாகுமரி ஆக மொத்தம் நான்கு மண்டலங்களில் நடைபெற்றது. இதில் 2492 தனியார் மற்றும் அரசு மருத்துவர்கள் பயிற்சி பெற்றனர்.

இன்றைய கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் ஆய்வு செய்யப்பட்டன:

மாநிலத்தில் செயல்பட்டு வரும் உரிய அதிகாரிகள் (Appropriate Authorities) மேற்கொள்ளும் செயல்பாடுகளை பரிசீலனை செய்து உரிய ஆலோசனைகளை இக்குழு இன்று வழங்கியது.

PCPNDT 1944 சட்டத்தை பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வழிவகைகள் ஆய்வு செய்யப்பட்டது.

வெளிநாடுகளுக்கு சென்று ஸ்கேன் பரிசோதனை மேற்கொண்டு கருவின் பாலினத்தை தெரிவிக்கும் இந்தியர்கள் மீது சட்ட ரீதியாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்க பரிந்துரை செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு 2025ல் இச்சட்ட விதிமீறல்கள் கண்டறியப்பட்ட 15 ஸ்கேன் மையங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், 38 மாவட்டங்களில் உள்ள ஆலோசனைக் குழுக்கள் மூலம் 1747 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 1608 மையங்கள் 2025-ஆம் ஆண்டில் மட்டும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அதே ஆண்டில் 15 சட்ட நடவடிக்கைகள் விதி மீறுபவர்கள் மீது எடுக்கப்பட்டுள்ளது.

பாலினம் விகிதம் 202122 ஆம் ஆண்டில் 934 என இருந்தது, தற்போது 2025-26 ஆம் ஆண்டில் 941 என உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மாநில மேற்பார்வைக் குழுவினை வலுப்படுத்தி, அதன் செயல்பாடுகளை பயனுள்ளதாக அமல்படுத்துவதன் மூலம், மாநிலத்தின் பெண் சிசுக் கொலைகள் குறைந்து பெண்களின் பாலின விகிதம் மேம்படும் என்ற கருத்துடன் இக்கூட்டம் நிறைவு பெற்றது.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், கூடுதல் செயலாளர் மரு.உமா, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திருமதி. விஜயலட்சுமி, தேசியநல வாழ்வு குழும இயக்குநர் மரு. அருண்தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினீத், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சித்ரா, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சுகந்தி ராஜகுமாரி, சமூகநலத் துறை கூடுதல் செயலாளர் திருமதி.வளர்மதி, சட்டத்துறை கூடுதல் செயலாளர் மகேஷ்குமார் இணை இயக்குநர் (சட்டம்) மரு.மீனாட்சி சுந்தரி மற்றும் உயர் அலுவலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் கலந்து கொண்டனர்.

## மா.பா.அன்புதுரை தலைமையில் நே.சிற்றரசு முன்னிலையில்

# ஆயிரம்விளக்கு கிழக்குப்பகுதி தி.மு.க. சார்பில் ‘தமிழ்நாடுதலைகுனியாது’ மாபெரும்பொதுக்கூட்டம்!

## எம்.எம்.அப்துல்லா – தயாநிதி மாறன் – மருத்துவர் எழிலன் நாகநாதன் சிறப்புரை!



ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பொதுக்கூட்டம் பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை தலைமையில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, தயாநிதிமாறன் எம்.பி., மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சென்னை, பிப்.4-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் எங்கள் இளம் தலைவர் வழிகாட்டுதலின்படி 2.22026, திங்கட்கிழமை மாலை 6.00. மணிக்கு சென்னை34. நுங்கம்பாக்கம் வடக்கு மாடவீதியில் (F3.நுங்கம்பாக்கம் காவல் நிலையம் அருகில்) தமிழ்நாடு தலை குனியாது மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த மாபெரும் பொதுக் கூட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி கழக செயலாளர் மா.பா.அன்புதுரை தலைமையில் நடைபெற்றது

இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி நிலை குழு தலைவர் நே.சிற்றரசு. முன்னிலை வகித்தார்.

இக் கூட்டத்தில் கழக அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர். தயாநிதி மாறன்.எம்.பி கழக மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன். எம்.எல்.ஏ. ஆகி யோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

இந் நிகழ்ச்சியில் ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் எம்.கே.வினோத் வேலாயுதம், தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ் மாநில துணை செயலாளர்கள் வெ.கௌதமன், வழக்கறிஞர் கே ஜெ. சரவணன், அழகிரி சதாசிவம், மாவட்ட கழக நிர்வாகிகள் து.விக்டர், என். ஆர்.துரை, வி.எஸ். கலை சங்கீதா, ஜெ.எஸ் அகஸ்டின் பாபு, தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள்

எம்டி. ஆர். நாதன் ஜெ. நற்குணநாதன், பாஇராபர்ட், ஜோஸ் டேனியல், வெற்றிச் செல்வி மாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள் எம்.ஆர்.ஐம்புலிங்கம் கோரவி, வெங்கடேசன், டிவைலட் மேரி, எம்ஜெயக்குமார், புவிபலாஜி, இதயத் பாட்சா, ஸ்டெர்லிங் மோகன், ரா. பொன்னம்மாள்,

வட்ட கழக செயலாளர்கள் ஆர்.பாபு,எப்பீட்டர் ஜான் எஸ்சத்திய பெருமாள் தேனா எல்தவமணி, கோயுவராஜ். எஸ். என்.கேராமன், க.சிட்டி பாபு.

டேவிட் இன்பராஜ் கே.எஸ்.தினேஷ் பிரபு, த.குணசேகர் வரதை த. பரி. ம. மோகன் மற்றும் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துபாய் வி.ஆர் .விஜய், திருமலை பொன்னுரங்கம். எம்.சி, டி.கே.லதாபிளரன்ஸ் மு.சீனிவாசன், மு. செந்தில் குமார், எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன். டி. எஸ்.ராஜா. மெய். சண்முகம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மெய்.சரவணன், எம்.ஓம்குமார் எம்.எம்.டி.ஏ கார்த்திக் கு.பச்சையம்மாள். K ரேணுகா. சத்திய பிரியா சியாமளா செந்தில். P.ராஜேஸ்வரி.

T.D. பாபு, கி.தம்பிதுரை P.ராஜேஸ்வரி, தாராவீரன்நா. அசோகன், எஸ்.பிரசன்னா. கே.கமலக் கண்ணன்,க.ரகுராமன் புலான்ராஜ் . கே.அசோக் குமார். நா.நாகராஜன்.ஜெ. எம். சங்கரலிங்கம். ஜெ. இருதயநாதன். எம்.ஏ.ஜெஸ்டின் ராஜ். சோலை ஏ.பார்த்திபன். ஜே. ஏஜாஸ் அலிகான். எம். மணி (எ) கே.எல்.எம். மணி. பழக்கடை எம். ஆறுமுகம். மு.பாண்டியன். B. ஜெயக்குமார். எஸ். தட்சணாமூர்த்தி,

மாவட்ட பிரதிநிதிகள்: கி ஜான்டிசில்வா. ஏ.வி. ராமநாதன். ஜெ.வரதராதன் ஏ. கண்ணன். கே. வேல் முருகன். சி. பாபு (எ) பாட்ஷா. ஜெ .சிவலிங்கம். கே.பி.வினோத். எஸ்குணசேகரன் அ. குப்பன். எம். டி.ஆர்புகழ் பா.சுரேஷ்குமார். எஸ்பார்த்திபன்.

அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் புவனேஷ் ஸ்ரீ வர்ஷன், வி. தனசேகர்.எஸ். ஆனந்தி. இ.சத்யா சி.மூர்த்தி, எஸ்.பிரேம்குமார் ஜிமாணிக்கம். பி.நரேந்தின் பி.சுரேஷ், ரகு.S. நடேசமர்த்தி.டி. துரைராஜ். எஸ் பிரதீப், தரணி குமார். எம்.செல்வம்.டி.கே . ரமேஷ் கோ தட்சணாமூர்த்தி. டி, ஆரி. வெ. அல்வின் குமார். ஆர்.சேஷாத்திரி (எ)பாலா .பி. ராம் குமார், செ. ஜான்சன் ராஜ். ஆர்.கிருஷ்ணகுமார். குலாரன்ஸ். இராஜதுரை. எஸ் அண்ணாதுரை. ஆர். பால் சுதாகர் சி.கே.ரஞ்சித் ஆர்கோபி மற்றும் ஏராளமான கழக தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்

நன்றியுரை: நுங்கை ப. மகேஷ் செயலாளர் 113வது வட்ட தி.மு.க த. தேவராஜ் செயலாளர் 113 ஆ வட்ட தி.மு.க எம்.என்.விஷ்ணு . செயலாளர் 113வது”ஆ”வட்ட தி.மு.க. கூட்ட ஏற்பாடு: ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி தி.மு.க. சென்னை மேற்கு மாவட்டம்.



பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு மயிலை கிழக்குப் பகுதி 125 வது வட்டம் பஜார் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மயிலை த வேலு, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ் .முரளி, தொகுதி பார்வையாளர் கோவி.லெனின் 125 வது வட்ட கழக செயலாளர் அ.தவநேசன், மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.